[1st April 1963

புலவர் கா. கோவிந்தன் : வட ஆற்காடு மாவட்டத்தில் மணிலாக் கொட்டை சம்பந்தமாக தீவிர சாகுபடித் திட்டம் கொண்டு வருவதற்கு திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மணிலா, கரும்பு போன்ற பல பயிர்களையும் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ்க் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கே? தஞ்சாவூர் ஜில்லாவிலா ? தஞ்சாவூர் ஜில்லாவில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டு வருவதற்கு குறிப்பாக 9 பயிர்கள், அதாவது 'பனானா, ஷுகர் கேன், கோகநட், கிரௌண்டுநட், இர்ரிகேடட் மில்லட்ஸ், வெஜிடபில், காட்டன், டுபாகோ' ஆகியவை நெல்லோடு சேர்க்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வட ஆற்காடு ஜில்லாவைப் பற்றி அந்த மாதிரி என்னிடம் தகவல் இல்லை.

திரு. கோ. சி. மணி : தீவிர சாகுபடித் திட்டம் அமுலில் இருக்கிற பகுதிகளில் இடை மகசூல் செய்கிற நேரத்தில் பருத்தி உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் உதவி அளித்து, அதை ஊக்குவிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பருத்தி, காட்டன் இதில் சேர்க்கப் பட்டிருக்கிறது. ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 70 தீவிர சாகுபடித் திட்டத்தின் கீழ் கடன் கொடுத்து உதவி செய்ய அரசாங்கம் முன் வரும்.

தொழிற்பேட்டை (விருத்தாசலம்)

* 479 கேள்வி.—**திரு. கே. நாராயணசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலத்தில் எவ்வளவு செலவில் தொழிற்பேட்டை அமைப்பதென்று சர்க்கார் முடிவு செய்துள்ளது ?

(இ) அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) சுமார் 32,78,000 ரூபாயில்.

(இ) இந்த தொழிற்பேட்டை இந்த ஆண்டு நடுவில் ஆரம்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Minor Ports (Development)

* 480 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. Minister for Works be pleased to state the various schemes to be implemented by the Government in the Third Five-Year Plan period for developing minor ports?

THE HON. SRI V. RAMAIAH : A paper[a] is placed on the Table of the House.

---

a Printed as Appendix III on pages 485–488 infra.